புலிகளுக்கு எதிராக **இந்திய-இஸ்ரேல் உதவியை அரசு நாடாது**

விலை ரூபா 5-00


# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 10 இதழ் 129

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24 — 06 — 1993


## பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு) புலிகளுக்கு எதிரானபோரில் இந்தியாவையோ, இஸ்ரேலையோ உதவிக்கு கோரும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையென்று பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா செய்தி (4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் சைக்கிள் அமோகவிற்பனை

(வவுனியா) வடபகுதிக்கு சைக்கிள் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு நீக்கியதைப் அடுத்து பெரும் தொகையான யாழ். பயணிகள் வவுனியாவில் அதிக (4-ம் பக்கம் பார்க்க)

## இரு பற்றறிக்கு இராணுவம் அனுமதி?

(கொழும்பு) வவுனியாவிலிருந்து வட பகுதி நோக்கிவரும் ஒவ்வொரு வரும் தலா இரு ரோச பற்றறிகள் கொண்டுவர இராணுவம் 4ம் பக்கம் பார்க்க

★ எரிபொருள்கள் உட்பட

# தடை நீக்கப்பட்ட பொருள்கள் ஞாயிறு யாழ். வந்து சேரும்!

## 'ருகுணு' நாளை புறப்படுகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாட்டிற்கு இலங்கை அரசினால் தடை நீக்கப்பட்ட எரிபொருள் உட்பட பல அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக் கொண்டு 'ருகுணு' கப்பல் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ். நோக்கி புறப்படவுள்ளது.

இந்தக் கப்பல் ... பிற்பகல் ... கிறது ... தொடர்ந்து யாழ்ப்பாணத் துறை துறைமுகத்தை எதிர் ... யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டு ... வருகின்ற ... கிழமை வந்து ... வதற்கு தடைசெய்யப்பட்ட இலங்கை அரசு இணங்கி சேருமென எதிர்பார்க்கப்படு அத்தியாவசிய பொருட்களை (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் இளாலியில் மோதல்

(எழுதுமட்டுவாள்) இளாலி கடற்புரப்பில் நேற்றுமுன்தினமிரவு விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றதாக தெரிய வருகிறது (4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு அழுத்தம் கொடுத்ததால் புலிகளுக்கு பெரும் வெற்றி

(கொழும்பு) சிங்கள யுத்தக் கைதிகளின் விடுதலை மூலம் தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்கச் செய்ததன் மூலம் தற்போது புலிகளின் கை ஓங்கியிருப்பதாக 'ஏ. எப். பி.' செய்தி கூறியுள்ளது.

அச்செய்தி மேலும் கூறுகையில், புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு அரசு தூதுவரை அனுப்பியதன் மூலம் புலிகள் அரசு மீது அழுத்தம் ஒன்றை கொடுத்துள்ளதுடன் அவர்கள் கை ஓங்கியுமுள்ளது.

இதேவேளை தமது பேச்சு வார்த்தையின் நுட்பத்தை புலிகள் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கருத்து தெரிவித்துமுள்ளன. (இ)

## ★ கைதிகள் விடுதலை கொழும்பில் நேற்று முக்கிய மாநாடு

(கொழும்பு) தற்பொழுது புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஏனைய 34 படையினரையும் விடுவிப்பது சம்பந்தமான மாநாடு ஒன்று கொழும்பில் நேற்று நடைபெற்றது. இம் (4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த அழிவுகளை பிரிகேடியர் பார்வையிட்டார் நேற்று கொழும்பு சென்றார்

(நெல்லியடி) இராணுவத் தாக்குதல்களினாலும், விமானத் தாக்குதல்களுக்கும் இலக்காகி சேதமடைந்திருந்த பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதி கட்டிடங்களை, பிரிகேடியர் ஆனந்த வீரசேகர நேற்றுக் காலை பார்வையிட்டு அதிர்ச்சியடைந்தார்.

கொழும்பு செல்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்புடன், பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்றுக் காலை 6-45 மணிக்கு அழைத்துவரப்பட்ட திரு. வீரசேகரா பின்னர் அங்கிருந்து 'நரேமா' கப்பலில், காலை 7-30 மணிக்கு 4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தாக்குதல் நடத்த புலிகள் ஊடுருவல்

(கொழும்பு) விடுதலைப் புலிகள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் திடீர் தாக்குதலை நடாத்தி ஜனாதிபதி விஜயதுங்கவின் ஆட்சியை நிலைகுலையச் செய்ய முயற்சித்து வருவதாக புலனாய்வுத்துறையினர் கூறியுள்ளனர்.

புலிகள் கொழும்பில் இராணுவ மையங்கள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் திடீர் தாக்குதலை விரைவில் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் புலனாய்வுத்துறைகூறியுள்ளது.

இதேவேளை புலிகளின் ஊடுருவலைத் தடுக்கப் படையினர் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (இ)

## பெற்றோலிய கூட்டுதாபனக்கிளை உடன் புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்) யாழ். நகரிலுள்ள பெற்றோலிய கூட்டுதாபன கிளையை மீண்டும் விரைவில் புனரமைக்கும்படி நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை நகரில் முன்னர் இயங்கிய இடத்திலேயே இங்கு கொண்டுவருவதற்கான புனரமைப்பு உத்தரவாதப் பத்திரங்களையும் வேண்டியே துரிதப்படுத்துவ வழங்க வேண்டுமென்றும் மேற்படி ஸ்தாபனம் யாழ். எரிபொருள் வியாபாரிகள் உத்தரவு பெற்ற கோரப்பட்டது. (4-ம் பக்கம் பார்க்க)

## மோதிலால் நேரு மீது கொழும்பில் விசாரணை?

(கொழும்பு) சட்டத்தரணி திரு. மோதிலால் நேரு ஜனாதிபதி பிரேமதாச கொலை குறித்து விசாரணை நடாத்திவரும் விசாரணைக் குழுவினரால் விசாரிக்கப்பட்டுள்ளதாக லண்டனிலிருந்து வெளிவரும் 'தாயகம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மோதிலால் நேரு மாகாண சபை தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் ஐ. தே. க. வில் இணைந்தார். தமிழகத்தில் நடைபெறும் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் இவர் ஆஜராகப் போவதாக முன்னர் செய்திகள் வந்ததும் தெரிந்ததே. (இ)

## ★ ஜெர்மனியில் சட்டவிரோதமாக 2,000 தமிழரை குடியேற்றிய 20பேரை பொலிஸ் தேடுகிறது

(பொன்) இரண்டாயிரம் இலங்கைத் தமிழர்களை சட்டத்துக்கு மாறாக ஜெர்மனியில் குடியேற்றிய இருபது பேர் கொண்ட கும்பலொன்றைத் தேடி ஜெர்மன் பொலிஸார் வலை விரித்துள்ளனர். இந்த இருபது பேர் கொண்ட கும்பலில் அண்மையில் ஒன்பது பேர் ஜெர்மன் (4-ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேஸ் புத்தகசாலை 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3206)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுரலயியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களின் பிரபல்யமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-231)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

(சி 252)


## சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நோயாளி ஒருவரின் 6000 ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இரு மாதங்களுக்கு முன்பும் மேற்படி நோயாளியின் மற்றொரு சைக்கிளும் இவ்வைத்தியசாலையில் திருட்டு போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். —72

## இராசி பலன்

**24-06-1993**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு ஆனி ) 10**

பஞ்சமி மு. இ. 11-46 வரை ஆயிலியம் காலை 7-58 வரை இராகுகாலம் பகல் 1-25 முதல் 2-55 வரை; சுபநேரம் காலை 7-25 முதல் 8-55 வரை ஸ்கந்த பஞ்சமி மாணிக்கவாசகர் குரு பூஜை.

மேடம்: புத்தி மந்தம், குடும்ப பிணக்கு, மனச்சுமை.

இடபம்: உறவினர் பகை, அவமதிப்பு, தொழில்வேதனை

மிதுனம்: சமூகபோக்கு, குடும்ப மகிழ்ச்சி, கலந்துரையாடல்.

கடகம்: தொழில் தேக்கம், பெண்கள் துயர், அலைச்சல்.

சிங்கம்: உயர்ந்தோர் நட்பு மரியாதை, காரியசித்தி.

கன்னி: ஆரோக்கியக்குறைவு அமைதியின்மை. வெறுப்பு.

துலாம்: எதிர்பாராத உதவி, நண்பர் வருகை, மகிழ்ச்சி.

விருச்சிகம்: பதவிமேன்மை, பயண நன்மை, குதூகலம்.

தனுசு: நோய் வேதனை, மனக்குழப்பம்; சோதனை.

மகரம்: மனைவியால் அவமதிப்பு, இடைஞ்சல் மனப்பயம்.

கும்பம்: பிறர் கௌரவம், நினைத்தது கைகூடல். புகழ்.

மீனம்: பொருளாதார சிறப்பு, கடமை உணர்வு, தூய சிந்தை.

— ஜோஸ்யர்

## இன்று

(கொழும்புத்துறை)

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் நல்லூர் பிரதேச நிலையத்தில் தையல் கண்காட்சி இடம் பெறவுள்ளது. இக்கண்காட்சி இன்று 24-ந் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய சர்வோதய மட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். —154

0 0 0

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஆனைக்கோட்டை காசி காண்டமடம் சிவன் கோவிலில் இன்று வியாழன் மாலை 4-30 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசை கொண்டாடப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் "தித்தித்திக்கும் தேன்" என்னும் பொருள் பற்றி நவாலி ஸ்ரேசன் பாடசாலை அதிபர் க. கணேசலிங்கத்தினால் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். —71

0 0 0

(யாழ்ப்பாணம்)

சைவ சித்தாந்த வேதாந்த குரு தவத்திரு வடிவேல் சுவாமிகளின் மூன்றுவது குருபூஜை தினம் இன்று வியாழக்கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் கொண்டாடப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

மாணிக்கவாசகர் குருபூசை 5, கலைப்புலவர் வீதியில் உள்ள திருவாசக மண்டபத்தில் இன்று நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு திருவாசக சொற்பொழிவுகளும், ஆய்வுரைகளும் இடம் பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி இன்று பிற்பகல் 2 மணியளவில் அதன் பிரதிநிதியின் விளக்கவுரையும், படக்காட்சியும் செயலக கேட்போர் மண்டபத்தில் இடம்பெறும். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இவர்களது செயல்பாட்டுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார் —162

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை மாணிக்கவாசகர் குருபூசை கொண்டாடப்படும. இன்றைய தினம் விசேட அபிஷேகம், திருவாசகம் முற்றும் ஓதுதல், நடைபெறும்.

0 0 0

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளின் கொத்தணி மட்டத்திலான ஆண்டு மூன்றிலிருந்து எட்டு வரையிலான மாணவிகளுக்கான தையல் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணி வரை நடைபெறவுள்ளது. —160

0 0 0

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று 24-ந் திகதி வியாழக்கிழமை மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், திருவாசகம் முற்றோதலும், அபிஷேகம், பூசையும் இடம்பெறும். —154

0 0 0

(யாழ்ப்பாணம்)

"நெருப்புக் காய்ச்சலும் அதைத் தடுப்பதற்கான வழி முறைகளும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மகளிர் விசாலாக்ஷி வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. —க

0 0 0

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் மாணவர் மன்றத்தால் இன்று 24-ந் திகதி வியாழக்கிழமை காலை 9. மணியளவில் "மக்கள் மருத்துவன்" என்னும் மலர் வெளியீடும், முன்னாள் கல்லூரி அதிபர் வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி உருவப்படம் திரைநீக்கமும் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் 2-ம் கட்டம் இன்று 24-ந் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு தாவடி இ. த. க. பாடசாலை வளவில் அதிபர் அநு. வை. நாகராஜன் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பரியோவான் முதலுதவிச் சங்கமும், படையும், வட மாகாணத்தின் நிர்வாகத்தின வருடாந்த அணிவகுப்பு விழாவும் இன்று 24-ந் திகதி வியாழக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில் மாலை 3-00 மணிக்கு நடைபெறும்.

## ★ புலிகளுக்கு ஆதரவு காட்டியதற்காக
# ராஜீவ் கொலையில் எவரும் குற்றவாளியாகிவிட முடியாது

### குற்றவாளிதரப்பு சட்டத்தரணி வாதம்

(சென்னை)

"1985ம் ஆண்டு தமிழக மக்கள் அனைவருமே நீதியதி மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் உட்பட அனைத்து ஊழியர்களும் தத்தம் ஒருநாளைய ஊதியத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அளித்தனர். இப்போ இந்தக்கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு காட்டிய ஒரே காரணத்திற்காக குற்றவாளிகளாகிவிட முடியாது."

சென்னை பூந்தமல்லி சிறைச்சாலை அருகே ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்கும் தனி நீதிமன்றில் நேற்று விசாரணை ஆரம்பமான போது குற்றவாளிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் துரைசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது வாதத்தில் மேலும் தெரிவித்ததாவது;

பாக்கியநாதன் புலிகள் தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியத்திற்கு கடிதம் எழுதியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 1990 வரை தமிழ்நாட்டில் இருந்து செயல்பட்ட பேபி சுப்பிரமணியத்திற்கு கடிதம் எழுதியது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டக்கூடியதான காரணமாகாது.

ராஜீவ்காந்தி கொலைமுயற்சி பற்றி இவருக்கு முன்னரே தெரிந்திருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லாதபோது அவருடைய கடிதத்தை மாத்திரம் வைத்து அரசாங்கத்தின் கீழ் வழக்குத்தொடுப்பது சரியல்ல. இவருடைய தாயும் சூழ்ச்சி குற்றவாளியாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

இருவருமே ஒருவாடகைக் கார் சிவராசனுடன் கொலைக்கு பின்பு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. சிவராசனுடன் சென்றதால் மட்டும் இவர்கள் கொலை சதியில் ஈடுபட்டதாக கூறமுடியாது என்றும் அவர் தமது விவாதத்தில் வாதாடினார். (ஈ)

இன்று குருபூசை

## திருவாசகம் தந்த மணிவாசகர்
### (சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்)

பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதி அம்மையாருக்கும் புத்திரராக அவதாரஞ் செய்தார் திருவாதவூரர். ஞானதிலகராக உதித்த இவர் சிவம் எனும் விளைவு உண்டாகத் தெய்வபிள்ளை போல் வளர்ந்தார். உரிய காலத்திலே தீஷ்சை பெற்றார். சகல கலைகளையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

பாண்டிய மன்னன் இவரை அழைத்துத் "தென்னவன் பிரமராயன்" என்னும் பெயரையும் நல்கி முதன் மந்திரியாக்கினான்.

பாண்டிய மன்னன் நாற்பத்தொன்பது கோடி பொன்னை இவனிடம் குதிரை வாங்கிவரக் கொடுத்தார். அப்பணம் திருப்பணிகளுக்குச் செலவிடப்படுகிறது. இதனை அறிந்த மன்னன் திருமுகவோலை அனுப்பினான். ஞானசாரியார் அரசனிடம் செல்லுமாறும் ஆவணி மூலதினத்திலே நாம் குதிரை கொண்டு வருவதாகக் கூறினார். குறித்த தினத்திற்கு முதல் தினம் குதிரைகள் துறைமுகம் வராததால் அரசன் வாதவூரருக்குத் தண்டனை வழங்கினான். குறித்த தினம் நரியைப் பரியாக்கித் தேவர்களைக் குதிரை வீரராகக் கொண்டு இறைவனே வருகின்றார். குதிரையேற்றத்தின் போது மன்னன் கொடுத்த பீதாம்பரத்தைச் சென்னி மிசை ஏற்று நகை செய்கின்றார். கயிறு மாறிக் கொடுத்ததும் அன்று நடுநிசியிலே பரிகள் நரிகளாகின்றன. கோபங்கொண்ட மன்னன் மீண்டும் துன்புறுத்துகிறான்.

இதனால் வாதவூரர் மந்திரி உத்தியோகத்தைத் துறந்து திருப்பெருந்துறை சென்று ஞானாசிரியன் அருளைப் பெற்றுத் திருவாசகம் பாடத் தொடங்கினார். சிதம்பரஞ் சென்று புத்தரை வாதில் வென்றார். இவர் பாடிய திருவாசகப் பாடல்களை இறைவனே அந்தணனாக வந்து எழுதினார். திருவாசகத்தின் பொருள் கேட்டபோது யாவற்றிற்கும் நடராஜப் பெருமானே பொருள் எனச் சுட்டிக்காட்டிப் பாலுடன் மேவிய நீர்போல் இறைவனுடன் ஐக்கியமானார் இதுவே சாயுட்சியமுத்தி எனப்படும்.

## பிரேமாவின் இல்லத்திலிருந்து பலகோடிபணம் மீட்பு குறித்து அரசு தொடர்ந்து மௌனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் 'சுச்சரித்த' இல்லத்திலிருந்து பலகோடி ரூபா பணமாக மீட்கப்பட்டது குறித்து அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாக சுதந்திரக்கட்சி எம். பி. நிமல் ஸ்ரீ பாலடி சில்வா நாடாளுமன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் இது குறித்து அவர் குற்றம் சாட்டிய போது கூட அரசு தரப்பினர் எவரும் இதனை மறுக்கவில்லை. எனினும் சில அரசு எம். பிக்கள் இவரது பேச்சின்போது குறுக்கீடு செய்தனர். குறுக்கீடு செய்பவர்கள் அவ்வாறு தொடர்ந்தால் அவர்களை சபையிலிருந்து வெளியேற்றப் போவதாக பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.

பிரேமா வீட்டிலிருந்து எட்டுக்கோடி ரூபா மீட்கப்பட்டதாக கூறப்பட்ட போதும் பணத்தின் தொகை பல கோடி ரூபா என இங்கு பத்திரிகைகள் கூறியுள்ளன. (இ)

## உண்மைகள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'வளவை வளவன் எழுதிய உண்மைகள் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை திரு. செம்பியன் செல்வன் தலைமையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை விடுதலைப்புலிகளின் பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், ஆய்வுரையை குழந்தை ம. சண்முகலிங்கம், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ரி)

## மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்தியை பதிவு செய்யும் செயற்பாட்டின் இரண்டாம் கட்ட நடவடிக்கை இம்மாதம் 30ம் திகதியுடன் முடிவடைகிறது என மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினர் நல்லூர் உ. அ. பிரிவுக்கு உட்பட்ட சகல மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

யாழ். பிரதானவீதி

## மக்கள் வங்கிக் கிளை

(யாழ்ப்பாணம்)

1990 ஜூன் மாதப் பிற்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி கிளை கட்டிடம் சேதமுற்றமையினால் இக்கிளையின் நடவடிக்கைகள் யாழ். ஸ்ரான்லி வீதி கிளை கட்டிடத்தில் நடைபெற்றுவந்தன. தற்பொழுது மேற்படி கிளை கட்டிடம் திருத்தியமைக்கப்பட்டு கடந்த 21ந் திகதி திங்கள் முதல் இக்கிளை மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இக்கிளை ஆரம்பித்த வைபவத்தின்போது கிளை முகாமையாளர் திரு. கி. ஆனந்தலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன், யாழ். ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. எஸ். சிறில், யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திரு. சு. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மக்கள் வங்கி வட பிராந்திய முகாமையாளர் திரு. இ. அருணானந்தன் உரையின்போது: தற்போதைய போர்க்கால சூழ்நிலையின்போது அபிவிருத்தித் திட்டங்களின் அவசியம்பற்றி விளக்கிக் கூறினார்.

## குவைத்தில் வேலையிழந்த தமிழருக்கு இதுவரையும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

கடந்த 1990-ம் ஆண்டில் குவைத்-ஈராக் யுத்தத்தினால் வேலை இழந்து நாடு திரும்பியவர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டுப்பணம் யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இரண்டு வருட காலமாகியும் இன்னும் வழங்கப்படவில்லை.

குவைத் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றவர்களில் பலர் அங்கு 1990ம் ஆண்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் இங்கு ஊருக்குத் திரும்பி வந்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் நஷ்டஈடு வழங்குவதாக குவைத் நாட்டு அரசு அறிவித்தது. இதற்கு இணங்க இதற்கான விண்ணப்பப்படிவம் பெற்று யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குவைத்நாட்டில் வேலைசெய்த சுமார் மூவாயிரம் பேர்வரை நஷ்டஈடு கோரி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக விண்ணப்பித்திருந்தனர். இரண்டுவருட காலமாகியும் இதுவரை இவர்களுக்கு நஷ்டஈட்டுபணம் கிடைக்கவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையை சேர்ந்த குவைத் நாட்டில் வேலைசெய்தவர்கள் பலருக்கு இந்த நஷ்டஈடு பணம் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. தமக்கான நஷ்டஈட்டுபணத்தை விரைவில் பெறுவதற்கு ஆவன செய்து தருமாறு இதற்காக விண்ணப்பித்தவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (72-தீ)

## நாடாளுமன்றின் முன்னால் 'பிரபா'வின் படம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் படம் ஒன்று கொழும்பில் நாடாளுமன்றத்தின் முன்னால் கிடந்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப்படம் அண்மையில் இந்தியாவில் வெளிவந்த பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. "பிரபா கொழும்பு வந்தாரா" என்ற தலைப்பின் கீழ் இந்தச் செய்தியை 'திவயின' வெளியிட்டுள்ளது. (சு-சி)

## ஜெய்ப்பூர் கால், கை பொருத்திய இளைஞர் கைது

(கொழும்பு)

ஜெய்ப்பூர் கால், கைகளுடன் கொழும்பில் வசித்துவரும் பல தமிழ் இளைஞர்களை பொலிசார் கடந்தவாரம் கைதுசெய்து தீவிரவிசாரணைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, ஜிந்துப்பிட்டி பகுதிகளில் ஜெய்ப்பூர் செயற்கை கால்கைகளுடன் வசித்துவந்த பலதமிழ் இளைஞர்களை பொலிசார் கைதுசெய்தபோது வீதி விபத்துகளிலும், ரயில் விபத்துகளிலும் தாம் சிக்கியே தமது கை, கால்களை இழந்து செயற்கை உறுப்புகளைப் பொருத்தியுள்ளோம் என்று பொலிசாருக்கு அத்தாட்சிகளுடன் காண்பிக்கப்பட்டபோதிலும் பொலிசார் அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## மங்கள முனசிங்கா வெளிநாடு பயணம்

(கொழும்பு)

தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க வெளிநாடு சென்றுள்ளார்.

இதேவேளை கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுமென தெரிவுக்குழு தீர்மானித்துள்ளதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் இதற்கு மறுப்பு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிடுமாறும் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்கும் எம். ஈ. பி. எம். எஸ். எஸ். பி. டி. பி பிரதிநிதிகள் திரு. மங்கள முனசிங்கவை வற்புறுத்தியுள்ளனர்.

அவர் வெளிநாடு சென்றதால் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (வி)

## பாஸ்போட் காரியாலயம் வவுனியாவில் திறப்பு

(வவுனியா)

வவுனியாவில் புதிய பாஸ்போட் காரியாலயம் ஒன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு சென்று தமது பாஸ் போட்டுகளைப் பெற்றுவந்த வடபகுதி மக்களின் வசதியை முன்னிட்டே இப்புதிய பாஸ்போட் காரியாலயம் தற்போது வவுனியாவில் திறக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு பிரதிக்கட்டுப்பாட்டாளர் திரு. ஓ. ஈ. நடராஜா தெரிவித்தார்.

இனிமேல் வடபகுதி மக்கள் கொழும்புக்கு செல்லத்தேவையில்லை. வவுனியாவிலுள்ள பாஸ்போட் காரியாலயத்தில் தமது பாஸ்போட்டுகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இந்தியா செல்வதற்கான அவசரகால பாஸ்போட்டை உடனடியாகவும் மற்றைய பாஸ்போட்டுகள் 10 தினங்களுக்குள் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். (வி-சி)

## இலங்கை பாதுகாப்பு குறித்து ராவ் - ரணில் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவைச் சந்தித்து பேச்சு நடத்திய இலங்கைபிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பாதுகாப்பு விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுக்களில் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கையும் இந்தியாவும் இணைந்து செயல்படும் கேள்வியே எழவில்லை என்று திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை தானே கவனித்துக்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## குரங்கினால் கடியுண்டவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்புத்துறை)

குரங்கினால் கடியுண்ட மூன்று வயதுச் சிறுமி தலையில் பலத்த காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகரைச் சேர்ந்த செல்வி என்பவரே குரங்குக் கடிக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவர்.

மேலும் லக்ஸ்மன் (வயது-4) என்பவரும் ஒன்றரை வயதுடைய குழந்தை ஒருவரும் குரங்கினால் கடியுண்டதாகவும் இவர்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (154-அ)

## "கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒரு அர்த்தமற்ற செயலாகும்"

(கொழும்பு)

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டுவருவது ஒரு அவசியமற்ற செயலாகும். இவ்வாறு நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் கூறியுள்ளார்.

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்துவதற்கு அரசு முயற்சிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு கடந்தவாரம் நாடாளுமன்றக் கட்டிடத்தில் அமைச்சர் ஹமீத் தலைமையில் முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற முஸ்லிம் உறுப்பினர், முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் கூடினர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் ஹமீத் மேலும் பேசுகையில்; சர்வஜன வாக்கெடுப்பால் கிழக்கில் பாரம்பரியமாக ஒன்றிணைந்து வாழ்ந்துவந்த தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் நிரந்தரமாக பிரிப்பதாகவே முடியும்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான எந்த ஒரு முயற்சியுடனும் சர்வஜன வாக்கெடுப்பை இணைக்கக்கூடாது என்று கூறினார். அமைச்சர் ஹமீத்தின் கூற்றை கூட்டத்திலிருந்த அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (வி-மி)

## அராலித்துறை குண்டுவெடிப்பு லண்டனில் ஆணைக்குழு முன் வெடிகுண்டு நிபுணர் சாட்சியம்

(லண்டன்)

ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட பத்து உயர் அதிகாரிகளின் மரணம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கமிஷன் கடந்த 14ம் திகதி முதல் 18ம் திகதிவரை தமது விசாரணைகளை லண்டனில் நடத்தியது. காமன் வெல்த் செயலகத்தில் இவ் விசாரணை நடைபெற்றது.

முக்கிய சாட்சிகளில் ஒருவரான வெடிகுண்டு நிபுணர் ஜோன். ஆர். வயட் 15, 16ம் திகதிகளில் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார். இரு தினங்களும் சட்டத்தரணிகளின் சமர்ப்பண உரை நடைபெற்றது. இந்த ஆணைக்குழு அங்கத்தவர்கள் மூவரும் தமது அறிக்கையை தயாரிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆணைக்குழு உறுப்பினரான சேர். கெனத் ஜேம்ஸ் கெய்த் விரைவில் இலங்கை வந்து ஜனாதிபதியிடம் அறிக்கையை கையளிக்கவுள்ளவர். (வி)

## விபத்தில் காயம்

(நெல்லியடி)

திருமண வைபவத்திலிருந்து பயணிகளை அழைத்து வந்த சொகுசு பஸ் ஒன்று பாடசாலை மாணவியை மோதியமையினால் அச்சிறுமியின் கால் முறிந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3-45 மணியளவில் பருத்தித்துறை மெத்தைக் கடைச் சந்தியில் இடம்பெற்றது.

சிறுமி ஓட்டிவந்த துவிச்சக்கர வண்டியின் முன்புறம் பலத்த சேதமானது. தம்பசிட்டியைச் சேர்ந்த 12 வயதான இச்சிறுமி மந்திகை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். -160-சி

## வாக்கெடுப்பு நடத்தும் சூழ்நிலை கிழக்கில் இல்லை

(கொழும்பு)

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்று தற்போது நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லையென சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; சுதந்திரக்கட்சி மாகாணசபையையோ, இணைப்பையோ, சர்வஜன வாக்கெடுப்பையோ கோரவில்லை. ஐ. தே. க. வே இதனை கொண்டுவந்தது. எனினும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை தீர்க்கும் பொறுப்பை நாடு முழுவதுமே ஏற்கவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த தெரிவுக்குழு இணங்குமா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனாலும் தெரிவுக்குழு இது குறித்து சொன்னதையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது என்றார். (வி)

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதாரம் சம்பந்தமாக கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது. (154)

## உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ். கோட்டை அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மணவாளக்கோல அபிஷேக அலங்கார வருடாந்த உற்சவம் கடந்த 21ம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணி தொடக்கம் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெற்று வருகிறது.

தொடர்ந்து 24 நாட்கள் உற்சவம் நடைபெற்று 25ம் நாள் அடுத்த மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை மாலை இரதோற்சவத்துடன் உற்சவம் பூர்த்தியாகும். -154


## சாவ. இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை விழா நாளை வெள்ளிக்கிழமை மேற்படி கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ப. தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் பழைய மாணவர் புலமைப்பரிசில் நிதியை பழைய மாணவர் சங்கம் சார்பாக பழைய மாணவர் திரு. இரா சுந்தரலிங்கம் அதிபரிடம் கையளிக்கவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழா இறுதியில் நடைபெறவுள்ளன. (வி)



14-06-93 அன்று முல்லைத்தீவு காவல் பணிமனை திறக்கப்பட்டது. தேசியக் கொடியினை முல்லை மாவட்ட தளபதி பாண்டியனினால் ஏற்றப்படுவதனையும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனும், காவல்துறை உறுப்பினர்களும் மரியாதை செலுத்துவதையும் படத்தில் காணலாம்.

# சமாதான தீர்வுக்கு அரசு முயல்கிறது

(கொழும்பு)

பாரிசில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு வரும் வழியில் இந்தியா சென்று விட்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடு திரும்பினார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றிய பிரதமர், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நிலைப்பாட்டிலிருந்து அரசு இன்னும் விலகவில்லையென்றும் இப்பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வு காண்பதற்கு அரசு முயற்சித்துவருவதாகவும் கூறினார். (தே-இ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி சமாதானத்திற்கு உதவும்

(லண்டன்)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் உதவ ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்கிழக்காசிய அறிஞர்கள் சிலர் முன்வந்துள்ளனராம்.

இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களைப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளச் செய்ய இவர்கள் உதவுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்படுத்தும் முகமாக ஐரோப்பிய நாடுகளிலுள்ள முக்கிய பிரமுகர்களைத் திரட்டும் பணிகளை அங்குள்ள தமிழ்ச் சங்கங்கள் மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. (இ)

# கூட்டணி எம்.பி.க்களை கொன்றுவிடுமாறு

# 'றோ' ரெலோவிற்கு உத்தரவிட்டது!

## புளொட் சித்தார்த்தன் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம்.பி.க்களை கொலை செய்யுமாறு இந்திய உளவுத்துறை (றோ) உத்தரவிட்டிருந்ததாக முன்னாள் 'ரெலோ' தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் 'புளொட்' உறுப்பினர்களிடம் கூறியிருந்ததாக புளொட்டின் புதிய தலைவர் சித்தார்த்தன் 'சண்டே ஐலன்டிற்கு' வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் கூறுகையில்: யாழ். குடாவிலுள்ள சகல கூட்டணி முன்னாள் எம்.பி.க்களையும் கொல்வதன் மூலம் கூட்டணியின் சக்தியைக் குறைக்க 'றோ' திட்டமிட்டது. இதற்காக அவர்கள் ரெலோவைப் பயன்படுத்தினர். எனது தகப்பனாரையும் (தர்மலிங்கம்) ஆலாலசுந்தரத்தையும் ரெலோவே கொன்றது. இதற்கான உத்தரவை 'றோ' வழங்கி ஸ்ரீ சபாரட்ணம் செயற்படுத்தினார்.

இக்கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்புமே கிடையாது. வடமராட்சியிலுள்ள இரு கூட்டணி முன்னாள் எம்.பி.க்களை கொல்ல அப்பகுதி ரெலோவினர் மறுத்துவிட்டதால் அவ்விருவரும் தப்பிவிட்டனர். அந்த காலகட்டத்தில் 'றோ' வுக்கும் ரெலோவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது.

தற்போது இலங்கை அரச இராணுவத்தினூடாக புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி.க்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள், இராணுவ தளபாடங்களை வழங்கிவருவதாகவும் அவர் கூறினார். (சி)

### இரு பற்றறிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அனுமதித்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது.

நேற்று வவுனியாவில் பெருமளவினர் றேடியோக்களையும் கொள்வனவு செய்தனர். சைக்கிள் வாங்குவோரின் தொகையே பெருமளவாக இருந்ததாம். (இ)

### யுத்த அழிவுகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைக்கு புறப்பட்டார்.

அரசுதரப்புடன் முக்கிய பேச்சுக்களை அவசரமாக நடாத்திவிட்டு திரு. வீரசேகரா இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (160-இ)

### பெற்றோலிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து திணைக்களங்களும் தமக்கு வேண்டிய பொருட்களை கப்பல் மார்க்கமாகவோ அல்லது தரைமார்க்கமாகவோ யாழ் மாவட்டத்துக்குள் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். செயலகம் செய்து கொடுக்குமென்றும் ஆனால் இவர்கள் தமக்குத் தேவையான ஏற்பாடுகளை காலதாமதமின்றி யாழ் செயலகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இதேநேரம் யாழ் அரச அதிபரும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொழும்பிலிருந்து வரவழைத்து இங்கு சேமித்து வைக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடப்பட்டது.

வடமாகாண மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக, தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அரசுக்கு அனுப்புவதெனவும் இங்கு முடிவெடுக்கப்பட்டது.

மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா தலைமையில் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து திணைக்களங்களின் அதிகாரிகளும், ப.நோ.கூ. சங்கப்பிரதிநிதிகளும், மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (வி:இ)

### ஹெலி நோட்டம்

(அரியாலை)

நேற்று காலை 10 மணிக்கு யாழ். குடாநாட்டுக் கரையோரப்பகுதிகளில் ஹெலி ஒன்று நோட்டமிட்டுச் சென்றது. (59-இ)

### தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 28ந்திகதி செல்லவிருக்கும் 'ஓமண' கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் அனுப்ப இருப்பதால் 28ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக வெளியூர் கடிதங்களை தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ் பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் அறிவித்துள்ளார். (162-59-இ)

### ஜெர்மனியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மிகுதி பதினொரு பேரையும் பொலிஸார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

சட்டத்துக்கு மாறாக ஜெர்மனியில் குடியேற விரும்பிய இரண்டாயிரம் இலங்கைத் தமிழர்களிடம் பலலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு முதலில் இவர்களை மாஸ்கோவுக்கு இக்கும்பல் கொண்டு சென்றது.

பின்னர் இத்தாலியிலுள்ள ரோம் நகருக்கு கொண்டு வந்து அங்கிருந்து சட்டத்துக்கு மாறாக ஜெர்மன் எல்லையை கடக்க வைத்து அங்கு இவர்கள் குடியேற்ற வைக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

# கிழக்கில் மிக மோசமாக மனிதஉரிமைமீறல் நடக்கிறது

## மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் தொடர்வதாக சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

1992-ம் ஆம் ஆண்டு பெரும் எண்ணிக்கையில் காணமற்போனவர்களுடன் அனை உயர் விகிதத்தில் உள்ளன. காணமற்போதல் இரகசியமாக தடுத்து வைத்தல் என்பன தற்போது சிறிலங்கா அரசபடைகளினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைதிகள் தொடர்ந்தும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் மோசமாக நடத்தப்படுவதும் சர்வதேச மன்னிப்பு சபையை குழப்பமடைய செய்துள்ளது. இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் நீண்டகாலமாக வழக்குத் தொடரப்படாமல் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறித்து இந்த அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக அரசு கவனிப்பு இல்லாமல் நடந்துள்ளது கவலைக்குரியது. எனவே இவ்வாறான மனித உரிமை மீறல்களை அரசு நிறுத்தவேண்டும்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-இ)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் கிளாலி கடலிலிருந்து படையினர் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கி சூட்டையும் கரையை நோக்கி நடாத்தினர்.

இதைதொடர்ந்து மோதல் இடம்பெற்றதாம். (170-இ)

### புலிகளுக்கு எதிராக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள் மகாநாட்டில் தெரிவித்துள்ளார். இது குறித்து பத்திரிகைகளில் வந்த செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவில் இருக்கும் போது இந்தியப் பிரதமர் நரசிம்மராவோடு பொருளாதாரம், தென்னிந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்கு கொண்டு வருவது பற்றிய விடயங்கள் குறித்தே பேச்சுக்கள் நடத்தியுள்ளாராம்.

இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. இந்தியாவும், இலங்கையும் ஒருமித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் ஈடுபடமாட்டாவென்றும் புலிகளோடு பேசுவதற்கு அரசாங்கம் முயற்சிகள் செய்தால் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (சு-இ)

### வவுனியா நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான சைக்கிள்களைக் கொள்வனவு செய்ததாக 'வெரித்தாஸ்' கூறியது.

வவுனியாவிலுள்ள சைக்கிள் விற்பனை நிலையங்களில் அநேகமான சைக்கிள்கள் நேற்று விற்பனையாகினவெனவும், இதுபோன்று வியாபாரம் ஒருபோதும் நடைபெறவில்லையென கடைக்காரர் தெரிவித்தனராம்.

போக்குவரத்துச் சாதனங்களுக்கும், மின்சாரம் போன்றவற்றிற்கும் அரசு விதித்துள்ள தடைகளினால் பழங்கால மனிதர் போல் வாழ்ந்து வரும் வடபகுதித் தமிழ்மக்களுக்கு இந்தத் தடை நீக்கம் பெரும் ஆறுதலைக் கொடுத்துள்ளதாகப் பலர் தெரிவித்துள்ளனர். (கே-இ)

### கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகரும் கலந்து கொண்டார்.

இதேவேளை விடுதலை செய்யப்பட்ட 5 பொலிஸாரர்களும் பலாலியில் இருந்து விஷேட விமானத்தில் கொண்டுவரப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

இவர்கள் உண்ணாவிரதத்தால் சோர்வுற்று இருந்தார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன. (சு.இ)

### ★ எரிபொருள்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யதை தொடர்ந்து இப்பொருட்கள் இங்கு வரவுள்ளன.

இக்கப்பலில் என்னென்ன பொருட்கள் எவ்வளவு அளவில் வருகிறதென்பது குறித்து அறிய வரவில்லை.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகம் வரவுள்ள 'றுகுணு' கப்பலில் டீசல், மண்ணெண்ணை என்பன எடுத்துவரப்படவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகப் பிரதிநிதி திரு. பீற்றர் சுவிற்ஸ் தெரிவித்துள்ளார். (157-கே-இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Po;s office, Sri Lanka under Licence Number B/10336/B